COUNT US IN 2020

There's Power In Being Counted

ASIAN AMERICANS ADVANCING JUSTICE

COUNTUSIN2020.ORG

# மக்கள் தொகை கணக்கெடுப்பு – ஓர் அறிமுகம்

10 ஆண்டுகளுக்கு ஒரு முறை, மக்கள் தொகை கணக்கெடுப்பு வாயிலாக ஐக்கிய அமெரிக்க (US) அரசாங்கம் இந்நாட்டில் வசிக்கும் *ஒவ்வொரு* நபரையும் கணக்கிடுகிறது. மக்கள் தொகை கணக்கெடுப்பு என்பது உங்கள் குடும்பத்தைப் பற்றியும், அதில் வசிக்கும் நபர்களைப் பற்றியும் அடிப்படைத் தகவல்களைக் கேட்கின்ற ஒரு சிறு கேள்விப்பட்டியல் ஆகும்.
உங்கள் தனிப்பட்ட பதில்கள் இரகசியமானவை.

அடுத்த மக்கள் தொகை கணக்கெடுப்பு **மார்ச் 2020 இல்** தொடங்கும். வளங்கள் மற்றும் பிரதிநிதித்துவத்துக்கான உங்கள் **நியாயமான** பங்கினைப் பெற நீங்கள் கணக்கில் சேர்க்கப்படுவதை உறுதிசெய்யுங்கள்!

## மக்கள் தொகை கணக்கெடுப்பில் சேர்க்கப்படுவது உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் உதவுகிறது.

- மக்கள் தொகை கணக்கெடுப்பு மூலம் பெறப்படும் தரவுகள் பள்ளிகள், நூலகங்கள், உணவு முத்திரைகள் மற்றும் சுகாதாரம் போன்ற முக்கியமான சேவைகளுக்காக $1.5 டிரில்லியன் டாலர்களுக்கும் மேற்பட்ட நிதியை பகிர்ந்தளிப்பதற்கு பயன்படுத்தப்படுகின்றன.
- மக்கள் தொகை கணக்கெடுப்பு மூலம் பெறப்படும் தரவுகள் சட்டமன்றங்களில் உங்கள் மாகாணத் தலைநகரம், நாடு முழுவதும் உள்ள நகரங்கள் மற்றும் மாநகரங்களுக்கு உரிய அரசியல் பிரதிநிதித்துவத்தைப் பகிர்வதற்கும் பயன்படுத்தப்படுகின்றன; முழுமையான கணக்கெடுப்பு உங்கள் சமூகத்திற்கான நியாயமான பிரதிநிதித்துவத்தைப் பெற வழிவகுக்கிறது.

## உங்கள் மக்கள் தொகை கணக்கெடுப்பு பதில்கள் இரகசியமாக வைத்துக்கொள்ளப்படும்.

மக்கள் தொகை கணக்கெடுப்பில் குடியுரிமை அல்லது குடியேற்ற நிலை பற்றி கேட்கப்பட மாட்டாது. உங்கள் தனிப்பட்ட தகவல்களை அரசாங்க முகமைகளிடம், குடியேற்ற அதிகாரிகளிடம், அல்லது பொதுமக்களிடம் பகிர்ந்துகொள்ள மக்கள் தொகை கணக்கெடுப்புச் செயலகத்துக்கு அனுமதி அளிக்கப்படவில்லை. உங்கள் பதில்களின் இரகசியத்தன்மையைக் கடுமையான சட்டங்கள் பாதுகாக்கின்றன! மக்கள் தொகை கணக்கெடுப்பு பதில்களைப் புள்ளிவிவர நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்த முடியும்.

## மக்கள் தொகை கணக்கெடுப்புக்கு பதிலளிப்பது விரைவானதும் எளிமையானதும் ஆகும்.

- **இணையம் வாயிலாகவும் நீங்கள் பதிலளிக்கலாம்.** அதற்கான அறிவுறுத்தல்களை மக்கள் தொகை கணக்கெடுப்பு செயலகம் **மார்ச் 2020-இன் மத்தியில்** உங்களுக்கு அனுப்பும். மக்கள் தொகை கணக்கெடுப்பின் அதிகாரப்பூர்வ வலைத்தளத்துக்குச் சென்று, உங்கள் குடும்பத்தின் ID-யை உள்ளிடவும், அதன் பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்.
- **தொலைபேசி வாயிலாகவும் நீங்கள் பதிலளிக்கலாம்.** மக்கள் தொகை கணக்கெடுப்பு செயலகத்தை தொலைபேசி வாயிலாக அழைத்து பதில் அளிக்கவும், மற்றும்
 மக்கள் தொகை கணக்கெடுப்பு பற்றிய கேள்விகள் கேட்கவும்.
- நீங்கள் இணையம் அல்லது தொலைபேசி வாயிலாக மக்கள் தொகை கணக்கெடுப்புக்கு பதிலளிக்கவில்லை எனில், மக்கள் தொகை கணக்கெடுப்பு செயலகம் உங்களுக்கு ஒரு **அச்சிட்ட கேள்வித்தாளை** அஞ்சலில் அனுப்பும்.

நீங்கள் பதிலளிக்கவில்லை என்றால், மே 2020 -இல் தொடங்கி, தகவல்களைக் கேட்பதற்காக மக்கள் தொகை கணக்கெடுப்பு ஊழியர் உங்கள் வீட்டிற்கு நேரில் வருவார். அப்போதும் கூட, ஜூன் 2020 வரை நீங்கள் இணையம் அல்லது தொலைபேசி வாயிலாக பதிலளிக்கலாம்.

## சில மொழிகளுக்கு மொழி உதவியும் கிடைக்கிறது.

இணைய வழி கேள்வித்தாள் மற்றும் தொலைபேசி வழி உதவி ஸ்பானிஷ், வியட்நாமிய, கொரிய, ரஷ்ய, அராபிக், டாகலாக், போலிஷ், பிரெஞ்சு, ஹைதிய கிரியோல், போர்ச்சுகீசிய மற்றும் ஜப்பானிய மொழிகளில் கிடைக்கின்றது.
மக்கள் தொகை கணக்கெடுப்பு செயலகம் மொழி அருஞ்சொல் அகராதி, மொழி அடையாள அட்டைகள் மற்றும் மொழிக் கையேடுகளை ஆங்கிலம் அல்லாத 59 மொழிகளில் தயாரித்துள்ளது. இது www.2020census.gov-இல் இடம்பெறச் செய்யப்படும்.

*மக்கள் தொகை கணக்கெடுப்பு பற்றிய கூடுதல் தகவல்களைக் காண,* *www.countusin2020.org/resources*-ஐப் பார்வையிடுங்கள்.